முருகப்பெருமான் துணை

**மகான் சக்தி நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.02.2023, திங்கட்கிழமை

1. தரும ஞான வழிகள்தனை
   தரணியோர் பின்பற்றி உயர
   ஆறுமுகனார் அவதாரமாக வந்து
   அற்புதம் நிகழ்த்தும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சுபகிருது சால் திங்கள்
   வரங்களென மூவைதிகதி சோமவாரம்
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 15 ம் நாள் 27.02.2023, திங்கட்கிழமை)
   வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை சக்தி நாயனார் யானும்
   அருளுவேன் உலகோர் நலம்பெற
   வாசி வென்ற ஞானிகள் படை
   வரங்கள் பல தந்து அரங்கனுடன்
4. அரங்கனுடன் கலந்து அருள
   அடியவர்கள் தேடி வந்து
   அரங்கா என வேண்டி நிற்க
   அனைவருக்கும் எவ்வித பேதமும் இன்றி
5. இன்றியே ஞானிகள் ஆசி
   இடர்களை அகற்றி மீட்டு
   நன்றான நிலை அடையும்படி
   நம்பிக்கையூட்டி காத்து வரும்
6. வருவோர்க்கு அரங்கன் பார்வை
   வாழவைக்கும் ஞான ஒளியாக
   குருவாக ஏற்றுத் திருவடியே
   குடையென வாழும் மக்களுக்கு
7. மக்களுக்கு அரங்கனின் நிழல்
   மாதவ கவசமாகி நின்று
   ஆக்கம் தந்து பாதுகாப்புடன்
   அவரவர் தேட்டு தனவளம்பெற
8. வளம்பெற வழிநடத்தி முன்நின்று
   வகை செய்யும் பகைவெல்லும்
   சலனமற நீயே யாவுமென
   சரணடைவு கொண்ட மக்களுக்கு
9. மக்களுக்கு மாயை அல்லலிலா
   மறுமை பிணி அனுகவிடா
   தேக்கமற தேசிகன் ஆற்றல்
   தெளிவு தந்து காத்து நிற்கும்

10. நிற்கவே நிதி வழி சாதி வழி
நிலைகளை மானுடச் சூழலை
ஏற்பு கொண்டு உழலுபவர்க்கும்
எல்லாம் மாயையென விளக்கி

11. விளக்கி சமத்துவ சமதர்ம
வேலவன் ஆசிபெற்ற சேய்களென
கலக்கமற உணர வைத்து
கலியினில் மாற்றும் தேற்றும் அரங்கன் அருள்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–